DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI

| | | |
|---|---|---|
| CC.NO. 186/22 | Crime No.: 17/22 | Police Station : BHAVANI |

| | | | | |
|---|---|---|---|---|
| Name | PW1- பிரகாஷ் | Caste | | |
| Father Name | அம்மாசை | Calling | | |
| Village | | Religion | | |
| Taluk | | Age | 36 | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 187301 the day of | | | | 06.03.2023 |

எதிரிகள் தவசியப்பன், வீராச்சாமி, மணி ஆஜர்.

**முதல் விசாரணை-**

**1)** நான் ஏமாபாளையத்தில் குடியிருந்து கொண்டு கட்டிட வேலை செய்து வருகிறேன். கடந்த 09.01.2022 அன்று நான் காலை 8.00 மணிக்கு எனது வயலில் தண்ணீர் கட்டிகொண்டிருந்தேன். அப்போது, அங்கு வந்த எதிரி தவசிப்பன் என்னிடம் நீ தண்ணீர் கட்டினால் எனது வீட்டிற்கு ஓதம் வருகிறது. அதனால் உனது வயலில் தண்ணீர் கட்டக்கூடாது, மீறி கட்டினால் பிரச்சனை வரும் என்று கூறி சென்றார். பிறகு தோட்ட வேலையை முடித்துவிட்டு நானும்,எனது அப்பாவும் வீட்டிற்கு வந்து, காலை 11.00 மணிக்கு எனது குழந்தைக்கு இளநீர் வெட்டி கொடுத்து கொண்டிருந்தேன். அப்போது அங்கு வந்த எதிரிகள் தவசியப்பன், வீராச்சாமி, வீராச்சாமியின் மனைவி மேகலா, மணி, மணியின் மனைவி மாரியம்மாள், வீராச்சாமி மகன் கவின், மணி மகன் ரமேஷ், தவசியப்பனின் மனைவி அய்யம்மாள் ஆகியோர்கள் வந்து தண்ணீர் கட்டகூடாது என்று சொன்னேன், நீ தண்ணீர் கட்டி உள்ளாய் என்று கூறி, கண்டாரோழி பையனே, தேவடியாக பையனே தண்ணீர் கட்டகூடாது என்று சொன்னோமே என தகாத வார்த்தைகளால் திட்டினார்கள். அப்போது அங்கு எனது மாடு கட்டியிருந்த மொளக்குச்சியை எதிரி வீராச்சாமி பிடுங்கி எனது தலை, தோள்பட்டை, மணிக்கட்டில் அடித்தார், தலையில் இருந்து இரத்தம் வந்தது. இதை தடுக்க வந்த எனது அப்பாவை, வீராச்சாமியின் கையிலிருந்த முளக்குச்சியை பிடுங்கிய எதிரி மணி எனது அப்பாவை மண்டை, தோள்பட்டையில் அடித்தார். இதை பார்த்த அருகிலிருந்த பவுனாயாள், சுரேஷ் ஆகியோர்கள் தடுக்க வந்தனர். அப்போது எதிரி மணி, முளைக்குச்சியை கையில் வைத்துகொண்டு இந்த தடவ தப்பித்துவிட்டாய், அடுத்த தடவ கொல்லாமல் விடமாட்டேன் என மிரட்டி அங்கிருந்து சென்றுவிட்டனர்.

2) பிறகு எனது அண்ணன் சண்முகம் வந்து, 108 ஆம்புலன்சை வரவழைத்து என்னையும், எனது அப்பாவையும் பவானி அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தார்.மருத்துவமனையில் போலீசார் வந்து விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **மேற்படி புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நீதிமன்றத்தில் உள்ள முளைக்குச்சியால்தான் எதிரிகள் தன்னை

அடித்ததாக சாட்சி அடையாளம் காட்டுகிறார். **அந்த முளைக்குச்சி அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நீதிமன்றத்தில் முன்னிலையாகி உள்ள நபர்கள்தான் தன்னை அடித்தார்கள் என்று சாட்சி அடையாளம் காட்டுகிறார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

**1)** என்னை 8 பேர் சேர்ந்து அடித்ததாகதான் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சைக்கு சேர்ந்தேன் என்றால் சரிதான். போலீசார் விசாரணையிலும் என்னை 8 பேர் சேர்ந்து அடித்ததாகதான் சொன்னேன் என்றால் சரிதான். சம்பவம் நடப்பதற்கு முன்பு, எனக்கும், எதிரிகள் குடும்பத்திற்கும் பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரிதான். தண்ணீர் எடுத்துவிடுவது சம்மந்தமாக எங்கள் இரு குடும்பத்திற்கும் பிரச்சனை இருந்து வருகிறது. தண்ணீர் எடுத்துவிடுவதால், எதிரிகளது வீட்டின் சுவரில் ஓதம் ஏற்படுகிறது என்று கூறிதான் பிரச்சனை ஏற்பட்டதென்றால் சரிதான். முதலில் எவ்வாறு தண்ணீர் பாய்ச்சினோமோ அதேபோலதான் தற்போதும் தண்ணீர் பாய்ச்சிகிறோம் என்றால் சரிதான். சண்டை நடந்த இடம் எனக்கு பாத்தியப்பட்ட இடமாகும். அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்ட இடமில்லை என்றால் சரிதான். எதிரி என்னை முளக்குச்சியால் அடித்ததால், நான் அணிந்திருந்த சட்டை மற்றும் முளக்குச்சியிலும் இரத்தம் படிந்தது என்றால் சரிதான். இரத்தம் படிந்திருந்த சட்டையை போலீசார் பார்த்து எழுதிகொண்டார்கள், ஆனால், என்னிடமிருந்து வாங்கவில்லை. அ.சா.பொ.1 முளக்குச்சியை நான்தான் காவல்நிலையம் சென்று கொடுத்தேன்.

2) மருத்துவமனையிலிருந்து வந்து சுமார் 15 நாட்கள் கழித்து மேற்படி அ.சா.பொ.1 முளக்குச்சியை காவல்நிலையம் சென்று கொடுத்தேன். அந்த சமயத்தில் போலீசார் மனு எதுவும் எழுதி என்னிடம் கையொப்பம் வாங்கவில்லை. அ.சா.பொ.1 முளக்குச்சியில் இரத்தகறை எதுவும் காணப்படவில்லை என்றால் சரியல்ல, அது காய்ந்துவிட்டது. நான் காவல்நிலையத்திற்கு சென்று அ.சா.பொ.1 யை கொடுக்கும்போது இரத்தகறை இருந்ததா என்றால் அப்பொழுதே காய்ந்துதான் இருந்தது. தற்போது காணப்படுவதுபோன்றுதான் இருந்தது. சம்பவம் நடந்தபோது 1ம் எதிரி தவசியப்பனுக்கும் அடிபட்டிருந்ததென்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், நியாயம் கேட்க வந்த எதிரிகளை நான் தாக்கிவிட்டு அதனால் என்மீது வழக்கு வந்துவிடும் என்ற பயத்தில், வேறு எங்கோ ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரிகள் தாக்கியதால் ஏற்பட்டதாக கூறி, பொய்யாக எதிரிகள் மீது புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

# DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI

| | | |
|---|---|---|
| CC.NO. 186/22 | Crime No.: 17/22 | Police Station : BHAVANI |

| | | | | |
|---|---|---|---|---|
| Name | PW2- அம்மாசை | Caste | | |
| Father Name | இருசாகவுண்டர் | Calling | | |
| Village | | Religion | | |
| Taluk | | Age | 57 | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 187301 the day of | | | | 06.03.2023 |

எதிரிகள் தவசியப்பன், வீராச்சாமி, மணி ஆஜர்.

**முதல் விசாரணை-**

**1)** நான் ஏமாபாளையத்தில் குடியிருந்து கொண்டு விவசாயம் வருகிறேன். கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு, ஜனவரி மாதத்தில் ஒரு நாள், காலை சுமார் 11.00 மணிக்கு எனது மகன் அ.சா.1 வயலில் தண்ணீர் கட்டிகொண்டிருந்தார். எனது பங்கில் நான் நெல் நட்டுள்ளேன். எதிரி தவசிப்பனின் பங்கில் அவர் வீடு கட்டிக்கொண்டார். அதனால் அவரது வீட்டில் ஒரம்பு எடுப்பதாக கூறி, எனது காட்டில் தண்ணீர் கட்டகூடாது என்று தகராறு செய்தார். அப்போது, வாய்தகராறு ஏற்பட்டது. அங்கிருந்து எதிரி சென்றுவிட்டார். தண்ணீர் கட்டி முடித்துவிட்டு, அ.சா.1 ம், நானும் வீட்டிற்கு வந்துவிட்டோம். எனது பேத்திக்கு அ.சா.1 இளநீர் வெட்டி கொடுத்து கொண்டிருந்தார். அங்கு, அங்கு வந்த எதிரிகள் தவசியப்பன், வீராச்சாமி, வீராச்சாமியின் மனைவி மேகலா, மணி, மணியின் மனைவி மாரியம்மாள், வீராச்சாமியின் மூத்த மகன், மணி மகன் ரமேஷ், தவசியப்பனின் மனைவி அய்யம்மாள் ஆகியோர்கள் அங்கு வந்தார்கள். எதிரி வீராச்சாமி மாடு கட்டும் முளைக்குச்சியை பிடுங்கி, எனது மகன் அ.சா.1 ன் தலை, கையில் அடித்து , இரத்தம் வந்தது.

2) எனது சட்டையை பிடித்து அய்யம்மாள், மாரியம்மாள் ஆகியோர்கள் பிடித்து கிழித்தார்கள். நான் எனது மகனுக்கு காயம் ஏற்பட்டதை பார்த்து சென்றபோது, எதிரி மணி, வீராச்சாமியின் கையிலிருந்த முளைக்குச்சியை பிடுங்கி, எனது கை, தலை, இடுப்பில் அடித்தார், எனக்கும் இரத்த காயம் ஏற்பட்டது. நான் கீழே விழுந்துவிட்டேன். தவசியப்பன் என்னை கல்லால் அடித்தார். எதிரி தவசியப்பன் என்னை பார்த்து இவனைதான் முதலில் கொல்லவேண்டும் என்று கூறினார். மணி என்னை உயிருடன் விடமாட்டேன் என்று கூறி அடித்தார். பிறகு முளைக்குச்சியை எதிரிகள் அங்கேயே போட்டுவிட்டு சென்றுவிட்டார்கள். அங்கு வந்தஎனது மூத்த மகன் சண்முகம் 108 ஆம்புலன்சை வரவழைத்து என்னையும், எனது மகன் அ.சா.1 யும் பவானி அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தார். மருத்துவமனையில் பரிசோதித்த மருத்துவர்கள் மேல்சிகிச்சைக்காக ஈரோடு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். நீதிமன்றத்தில் முன்னிலையாகி உள்ள நபர்கள்தான் தன்னை அடித்தார்கள் என்று சாட்சி அடையாளம் காட்டுகிறார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

**1)** சண்டை நடக்கும்போது, எனது மகன் சண்முகம் சம்பவ இடத்தில் இருந்தார். வீட்டிலிருந்து சம்பவ இடத்திற்கு வந்தார். சண்டை நடந்தபோது சண்முகம் வந்து தடுக்க முயற்சி செய்தார். அப்போது சண்முகத்திற்கு மொக்கை அடி ஏற்பட்டது. இரத்தகாயம் ஏற்படவில்லை. போலீசார் ஈரோடு அரசு மருத்துவமனைக்கு வந்து என்னிடம் விசாரித்தார்கள். போலீசாரிடம் 8 பேர் என்னை அடித்தார்கள் என்று கூறினேன். மருத்துவமனையிலிருந்து வெளிவந்த பிறகுதான், அ.சா.பொ.1 முளைக்குச்சியை போலீசாரிடம் கொடுத்தோம். சண்டை நடந்த இடம் எனது இடமாகும். எனது இரத்தம் படிந்த கிழிந்த சட்டையை போலீசார் பார்த்து எழுதிக்கொண்டார்கள், போலீசாரிடம் கொடுக்கவில்லை. எனக்கும், எதிரிகள் குடும்பத்திற்கும் தண்ணீர் எடுத்துவிடுவதால் எதிரிகளின் வீட்டு சுவற்றிற்கு ஓதம் ஏற்படுவதாக முன்விரோதம் இருந்து வருகிறதென்றால் சரிதான்.

2) நானும், அ.சா.1ம்தான் 1ம் எதிரியைதாக்கி காயம் ஏற்படுத்தினோம் என்றாலும், அதனால் எங்கள்மீது வழக்கு வந்துவிடும் என்ற பயத்தில், வேறு எங்கோ ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரிகள் தாக்கியதால் ஏற்பட்டதாக கூறி, பொய்யாக எதிரிகள் மீது புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI

| | | |
|---|---|---|
| CC.NO. 186/22 | Crime No.: 17/22 | Police Station : BHAVANI |

| | | | |
|---|---|---|---|
| Name | PW3- சண்முகம் | Caste | |
| Father Name | அம்மாசை | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | 36 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 187301 the day of | | | 06.03.2023 |

எதிரிகள் தவசியப்பன், வீராச்சாமி, மணி ஆஜர்.

**முதல் விசாரணை-**

**1)** நான் ஏமாபாளையத்தில் குடியிருந்து கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 09.01.2022 அன்று காலை சுமார் 11.00 மணிக்கு எனது தம்பி அ.சா.1 வயலில் தண்ணீர் கட்டிகொண்டிருந்தார். எனது அப்பா அ.சா.2 மருந்து அடித்து கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த எதிரி தவசியப்பன் தண்ணீர் கட்டகூடாது என்று சொல்ல வாய்தகராறு ஏற்பட்டது. அங்கிருந்து எதிரி சென்றுவிட்டார். தண்ணீர் கட்டி முடித்துவிட்டு, அ.சா.1 ம், அ.சா.2 ம் வீட்டிற்கு வந்துவிட்டார்கள். அப்போது அங்கு வந்த எதிரி வீராச்சாமி மாடு கட்டியிருக்கும் முளைக்குச்சியை எடுத்து எனது தம்பி அ.சா.1 யை மண்டை, கண், கையில் அடித்துவிட்டார். அப்போது அங்கு வந்த எதிரி மணி முளைக்குச்சியை வீராச்சாமியிடமிருந்து வாங்கி, அ.சா.2 ஆன எனது அப்பாவை அடித்துவிட்டார். அ.சா.1 க்கும், அ.சா.2 க்கும் இரத்த காயம் ஏற்பட்டது. மாரியம்மாள், மேகலா, ரமேஷ், கவின் ஆகியோர்கள் சேர்ந்து தென்னப்பட்டையால் எனது அப்பாவை அடித்துவிட்டார்கள். மேற்படி சம்பவத்தை நான் பார்த்தேன். பவனாயாள் சுரேஷ் மற்றும் நான் சென்று விளக்காட்டிவிட்டோம். எங்களால் விளக்காட்ட முடியவில்லை.

2) பிறகு அங்கிருந்தவர்கள் கொல்லாமல் விடமாட்டோம் என்று கூறிவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டார்கள். பிறகு நான் 108 ஆம்புலன்சை வரவழைத்து எனது அப்பாவையும், எனது தம்பியையும் பவானி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். நீதிமன்றத்தில் முன்னிலையாகி உள்ள நபர்கள்தான் அன்றைய தினம் எனது தம்பி அ.சா.1 யையும், எனது அப்பா அ.சா.2 யையும் அடித்தவர்கள் என்று சாட்சி அடையாளம் காட்டுகிறார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

**1)** போலீசார் என்னை விசாரிக்கும்போது 8 பேர் சேர்ந்து என்னையும், அ.சா.1, அ.சா.2 யையும் தாக்கினார்கள் என்று கூறினேன் என்றால் சரிதான். எனக்கு அடிபட்டதற்காக, அ.சா.1 யும், அ.சா.2 யும் மருத்துவமனைக்கு அழைத்து செல்லும்போது எனக்காக மருத்துவம் எதுவும் பார்க்கவில்லை. நான் சொன்னதுபோல நான் சம்பவ இடத்தில் இல்லை என்றும், எந்த வித அடியும்

படவில்லை என்றாலும், நாங்கள்தான் 1ம் எதிரியை தாக்கினோம் என்றாலும், அதனால் எங்கள்மீது வழக்கு வந்துவிடும் என்ற பயத்தில், வேறு எங்கோ ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரிகள் தாக்கியதால் ஏற்பட்டதாக கூறி, பொய்யாக எதிரிகள் மீது புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**